கண்கூடாகக் காண்பவற்றின் சான்றுகள்

அல்லாஹ் அவனிடம் உதவி நாடுபவர்களுக்கெல்லாம் உதவி செய்கிறான் மற்றும் இன்னல்களுக்கு ஆளாக்கப்படுபவர்களுக்கும் உதவுகிறான் என்பது நாம் நாள்தோறும் கண்கூடாகக் காணும் காட்சிகளாகும். ஒரு முஸ்லிமுடைய உறுதியான நம்பிக்கை யாதெனில், ஒவ்வொரு இக்கட்டான நிலையிலும் உதவுபவன் அல்லாஹ்தான் என்பதாகும். இதனைப்பற்றிய வரலாற்று ரீதியான ஒரு மகத்தான சான்று உள்ளது. பத்ரு யுத்தத்தின்போது முஸ்லிம்கள் அல்லாஹ்விடம் உதவி நாடியபோது அல்லாஹ் அவர்களுடைய துஆவைக்கேட்டு அதனை ஏற்றுக்கொண்டவனாக அவர்களுக்கு உதவியாக தன்னுடைய சிறப்புமிக்க வானவர்களின் படையினை அனுப்பினான். இது திருக்ஃகுர்ஆனில் பதிவு செய்யப்பட்டுள்ளது:

إِذْ تَسْتَغِيثُونَ رَبَّكُمْ فَاسْتَجَابَ لَكُمْ أَنِّي مُمِدُّكُم بِأَلْفٍ مِّنَ الْمَلَائِكَةِ مُرْدِفِينَ ﴿٩﴾ (الأنفال:٩)

பொருள்: உங்கள் இறைவனிடம் நீங்கள் உதவி தேடி முறையிட்டுக் கொண்டிருந்ததையும் நினைத்துப்பாருங்கள். அப்போது அவன் ஏற்று பதிலளித்தான், ஓராயிரம் வானவர்களைத் தொடர்ச்சியாக அனுப்பி நிச்சயம் நான் உங்களுக்கு உதவிசெய்வேன் (அல் அன்ஃபால்:9)

இரண்டாவது கண்கூடான சான்று ஹஜ்ரத் ஜ்ஸகரிய்யா (அ) அவர்கள் கேட்ட துஆவாகும். அவர்கள் (அ) அல்லாஹ்விடம் ஒரு நேர்மையான மகனைப்பெற ஆசையுடன் வேண்டி துஆ செய்தார்கள். அல்லாஹ் அவர்களுடைய துஆவை ஏற்றுக்கொண்டான், அவர்களுடைய மனைவி மகப்பேறுக்கான அந்தஸ்தினை இழந்துவிட்டிருந்த நிலையிலும் ஹஜ்ரத் யஹ்யா (அ) அவர்கள் மகனாகப் பிறப்பது பற்றிய நற்செய்தியினை அளித்தான். அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

وَزَكَرِيَّا إِذْ نَادَىٰ رَبَّهُ رَبِّ لَا تَذَرْنِي فَرْدًا وَأَنتَ خَيْرُ الْوَارِثِينَ ﴿٨٩﴾ فَاسْتَجَبْنَا لَهُ وَوَهَبْنَا
لَهُ يَحْيَىٰ وَأَصْلَحْنَا لَهُ زَوْجَهُ ۚ إِنَّهُمْ كَانُوا يُسَارِعُونَ فِي الْخَيْرَاتِ وَيَدْعُونَنَا رَغَبًا
وَرَهَبًا ۖ وَكَانُوا لَنَا خَاشِعِينَ ﴿٩٠﴾ (الأنبياء: 89-90)

பொருள்: மேலும், ஜ்ஸகரிய்யாவுக்கு (அ) அருட்பேற்றினை வழங்கினோம், அவர் தம் இறைவனிடம், இறைவனே என்னை நீ தன்னந்தனியாக விட்டுவிடாதே, நீயே மிகச்சிறந்த வாரிசு ஆவாய் என்று பிரார்த் தித்த சமயத்தை நினைவு கூறும். பிறகு நாம் அவருடைய வேண்டுதலை ஏற்றுக்கொண்டு அவருக்கு யஹ்யாவைக் (அ) கொடையாக வழங்கினோம். அவருடைய மனைவியை அதற்கு அருகதையுள்ளவராகவும் ஆக்கி

www.uzarfalahi.com

னோம். இவர்கள் யாவரும் நற்பணிகளில் முனைந்து செயல்படுபவர் களாகவும் பேரார்வத்துடனும் அச்சத்துடனும் நம்மிடம் இறைஞ்சக்கூடிய வர்களாகவும் திகழ்ந்தார்கள். நம்முன் பணிந்தவர்களாகவும் விளங்கினார் கள். (அல் அன்பியா:89.90).

இவ்விதமான நிகழ்வு இறைத்தூதர் ﷺ அவர்கள் காலத்திலும் நடந்தது. மதீனா முனவ்வரஹ்வில் பஞ்சம் ஏற்பட்டது. இறைத்தூதர் ﷺ அவர்கள் மிம்பர் மீதேறி க்ஹுுத்பா உரை நிகழ்த்திக்கொண்டிருந்தபோது ஒரு நாட் டுப்புற அரபி வந்து கூறலானார்: இறைத்தூதரே ﷺ என்னுடைய சொத்துக் களெல்லாம் தீர்ந்துவிட்டன, குழந்தைகள் பசியால் தவிக்கின்றனர், நீங்கள் இந்தப் பேரிடர் நீங்க அல்லாஹ்விடம் துஆ செய்யுங்கள். இறைத்தூதர் ﷺ அவர்கள் அல்லாஹ்விடம் துஆ கேட்க கைகளை உயர்த்தினார்கள், துஆ கேட்டார்கள், துஆவும் உடனேயே ஏற்றுக்கொள்ளப்பட்டது, வானத்தில் கார்மேகங்கள் சூழ்ந்து பரவின, இறைத்தூதர் ﷺ அவர்கள் துஆ கேட்டு முடிப்பதற்கு முன்பாகவே மழை கொட்ட ஆரம்பித்தது. இறைத் தூதர் ﷺ அவர்கள்மீது மழைத்துளிகள் விழுவதையும் அவர்களுடைய கரங்களி லிருந்து மழைத்தண்ணீர் சொட்டுவதையும் மக்கள் பார்த்தனர். இந்த மழை ஒரு வார காலம் தொடர்ந்தது. நிலைமை எந்த அளவிற்கு ஆகிவிட் டது என்றால் நிலைமையை சமாளிக்க முடியாமல் ஒருவர் நின்று உரத்தக் குரலில் கூறலானார், இறைத்தூதரே ﷺ எங்களுடைய வீடுகள் இடிந்து விழுகின்றன, பொருட்களெல்லாம் நீரில் மூழ்கிக்கொண்டிருக்கின்றன, அல்லாஹ்விடம் மழை நின்றுவிடும்படி துஆ செய்யுங்கள். இறைத்தூதர் ﷺ அவர்கள் துஆ செய்தார்கள் மழையும் நின்றுவிட்டது.

فَبَيْنَا النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَخْطُبُ فِي يَوْمِ جُمُعَةٍ قَامَ أَعْرَابِيٌّ، فَقَالَ يَا رَسُولَ اللَّهِ: هَلَكَ المَالُ وَجَاعَ العِيَالُ، فَادْعُ اللَّهَ لَنَا، فَرَفَعَ يَدَيْهِ وَمَا نَرَى فِي السَّمَاءِ قَزَعَةً، فَوَالَّذِي نَفْسِي بِيَدِهِ، مَا وَضَعَهَا حَتَّى ثَارَ السَّحَابُ أَمْثَالَ الجِبَالِ، ثُمَّ لَمْ يَنْزِلْ عَنْ مِنْبَرِهِ حَتَّى رَأَيْتُ المَطَرَ يَتَحَادَرُ عَلَى لِحْيَتِهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، فَمُطِرْنَا يَوْمَنَا ذَلِكَ، وَمِنَ الغَدِ وَبَعْدَ الغَدِ، وَالَّذِي يَلِيهِ، حَتَّى الجُمُعَةِ الأُخْرَى، وَقَامَ ذَلِكَ الأَعْرَابِيُّ – أَوْ قَالَ: غَيْرُهُ – فَقَالَ: يَا رَسُولَ اللَّهِ، تَهَدَّمَ البِنَاءُ وَغَرِقَ المَالُ، فَادْعُ اللَّهَ لَنَا، فَرَفَعَ يَدَيْهِ فَقَالَ: « اللَّهُمَّ حَوَالَيْنَا وَلاَ عَلَيْنَا» فَمَا يُشِيرُ بِيَدِهِ إِلَى نَاحِيَةٍ مِنَ السَّحَابِ إِلَّا انْفَرَجَتْ، وَصَارَتِ المَدِينَةُ مِثْلَ الجَوْبَةِ، وَسَالَ الوَادِي قَنَاةُ شَهْرًا، وَلَمْ يَجِئْ أَحَدٌ مِنْ نَاحِيَةٍ إِلَّا حَدَّثَ بِالْجَوْدِ

* * *

www.uzaifalahi.com